தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1993, மார்ச் 23, செவ்வாய்க்கிழமை

பங்குனி 10, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு–2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''

எச்செயலைப்பற்றியும் சொல்லுதல் எவர்க்கும் எளிதாகவே இருக்கும். ஆனால், அதனைச் செய்து முடிப்பது என்பதுதான் மிக அருமையானது ஆகும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 141, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

141—

சீர்காழி தொகுதியில் கால் நடைகளை அடைக்கும் பவுண்டு கட்டுதல்.

*10995—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

சீர்காழி தொகுதியில் உள்ள வைத்தீஸ்வரன் கோவில், கொள்ளிடம், பெருந்தோட்டம் போன்ற இடங்களில் பவுண்டு கட்டிக் கொடுக்கும் (கால்நடைகள் அடைப்பதற்கு) திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதிதாக கால்நடைப்பட்டி அமைக்கும் உத்தேசம் இல்லை. சீர்காழி வட்டத்தில் ஏற்கெனவே பழுதடைந்த நிலையில் கால் நடைப் பட்டிகள உள்ளன. இந்த கால்நடைப் பட்டிகள் உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால்நடைப் பட்டிகளையும் பழுதுபார்க்க ஒட்டு மொத்தமாக கருத்துரு

அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சார்ந்த வைத்தீஸ்வரன் கோயில், கொள்ளிடம், பெருந்தோட்டம் போன்ற இடங்களில் எல்லாம் 10 வருடங்களுக்கு முன்னால் பவுண்ட் இருந்தது. பவுண்ட் இருந்த காலங்களில் அங்கு விவசாயம் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டது. ஆனால், தற்போது பவுண்டு இல்லை ஆதலால் அங்கு பயிர் செய்யும் விவசாயப் பொருள்களை ஆடுகள், மாடுகள் நாசம் செய்கின்றன. எனவேதான் அன்பு கூர்ந்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் விவசாயிகளுடைய நலன்கள் கருதி அங்கே பவுண்டு அமைத்து கொடுத்தால் பயிர்கள் நாசம் செய்வதைத் தடுக்க முடியும். அதன் மூலம் அரசுக்கும் வருமானம் வரும். மேலும், ஒருவருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. அதன் மூலம், அதாவது அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஒருவர் வேலை வாய்ப்பு பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, விவசாயிகளுடைய நலன் கருதி இந்த நிதி ஆண்டில் இதைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இப்படி 17,720 கிராமங்கள் இருந்தாலும், கால்நடை பட்டிகள் தொன்று தொட்டு பல ஆண்டுக்காலமாக 3,484 தான் இருக்கிறது. அதில் ஏறக்குறைய 431 தான் நல்ல நிலையில் உள்ளது. பழுது அடைந்தவைகளை பழுது பார்ப்பதற்காக அரசு உத்தேசித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு தனியாக நிதி வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. நிதி நிலைமைக்கு ஏற்றவாறு அவைகள் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 142, திரு. ஆர். டி. அரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

142—

விருத்தாசலம் நகரில் பெண்களுக்கென்று தனிக் கல்லூரி அமைத்தல்.

*9500—திரு. ஆர். டி. அரங்கநாதன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் பெண்களுக்கென்று தனிக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?